சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதியமானியம் வழங்கும் திட்டம் – 2016–2017ஆம் நிதியாண்டில் விடுபட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.38,60,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 07** — **நாள்: 27.03.2018**
**ஹேவிளம்பி - பங்குனி, 14**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 7, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 27.03.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 2651/மாதிந.2.1/2016, நாள் 08.09.2017.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 230 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 668 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில், 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.7,98,35,000/– (ரூபாய் ஏழு கோடியே தொன்னூற்றெட்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும், 2016–2017ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப்பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 2016–2017ஆம் நிதியாண்டிற்கு சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் கோரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது எனவும், தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப்பயிற்சியாளர்களுக்கான ஊதிய மானியம் கோரும் கருத்துருக்கள் காலதாமதமாக பெறப்பட்டது எனவும், 2016–2017ஆம் நிதியாண்டில் நிர்வாகக்

காரணங்களினால் விடுபட்ட கீழ்க்காணும் 12 தன்னார்வ நிறுவனங்களில் பணிபுரியும் 22 சிறப்பாசிரியர்கள் மற்றும் 11 தசைப் பயிற்சியாளர்களுக்கான ஊதிய மானியமாக ரூ.38,60,000/– மட்டும் சிறப்பினமாகக் கருதி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் | சிறப்பு ஆசிரியர் / தசைப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் 12 மாதங்களுக்கு | அரசு அங்கீகாரம் பெற்ற காலம் |
|---|---|---|---|---|
| | சேலம் | | | |
| 1. | ஆதர்ஸ் தாய் சிறப்பு பள்ளி, சேலம். | 3 | ரூ.3,60,000/– | 23.05.2016<br>22.05.2018 |
| | விழுப்புரம் | | | |
| 2. | காமராஜ் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி, திண்டிவனம் தாலுக்கா | 3 | ரூ.3,00,000/–<br>[(2 x 10,000 x 12 = 2,40,000)<br>(1 x 10,000 x 6 = 60,000)] | 22.05.2016<br>21.05.2018 |
| | தூத்துக்குடி | | | |
| 3. | வித்யாபிரகாசம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, முத்தம்மாள் காலனி, தூத்துக்குடி. | 2 | ரூ.2,00,000/–<br>[(1 x 10,000 x 12 = 1,20,000)<br>(1 x 10,000 x 8 = 80,000)] | 15.03.2016<br>14.03.2018 |
| | திருநெல்வேலி | | | |
| 4. | பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி. வாசுதேவநல்லூர். | 3 | ரூ.3,60,000/– | 10.06.2016<br>31.05.2017 |
| 5. | ஆஷாகிரண் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி, ஏ.பி. நாடனூர் | 3 | ரூ.3,60,000/– | 01.09.2015<br>31.08.2018 |
| 6. | பிஷப் சார்ஜென்ட் மனவளர்ச்சி குன்றியோர் | 3 | ரூ.3.60.000/– | 01.04.2016 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிறப்பு பள்ளி. | | | 31.03.2018 |
| | வேலூர் | | | |
| 7. | விஷ்வாஸ் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, இராணிப்பேட்டை. | 3 | ரூ.3,60,000/– | 20.08.2016<br>19.08.2018 |
| 8. | நேசம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, ஆற்காடு. | 2 | ரூ.2,40,000/–<br>[(1 x 10,000 x 12 = 1,20,000)<br>(1 x 10,000 x 12 = 1,20,000)] | 01.06.2016<br>31.05.2018 |
| | சிவகங்கை | | | |
| 9. | புனித குவனெல்லா அன்பகம் சிறப்பு பள்ளி | 3 | ரூ.3,60,000/– | 11.02.2015<br>11.02.2017 |
| 10. | நிர்மல் சிறப்பு பள்ளி | 3 | ரூ.3,60,000/– | 22.08.2015<br>18.09.2017 |
| 11. | அன்னை சாரதா சிறப்பு பள்ளி | 3 | ரூ.3,60,000/– | 15.04.2016<br>14.04.2018 |
| | காஞ்சிபுரம் | | | |
| 12. | உமீத் ஆஷா கிரண் சிறப்புப் பள்ளி, விமான படை தளம், மாடம்பாக்கம். | 2 | ரூ.2,40,000/–<br>[(1 x 10,000 x 12 = 1,20,000)<br>(1 x 10,000 x 12 = 1,20,000)] | 05.02.2015<br>18.09.2017 |
| | **மொத்தம்** | **33** | **ரூ.38,60,000/–** | |

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 22 சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் 11 தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் நிதியாண்டில் விடுபட்ட மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள 12 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஊதிய மானியம் மாதத்திற்கு

ரூ.10.000/– வீதம் 33 சிறப்பாசிரியர்களுக்கு ரூ.38.60.000/– (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – MG–மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி – 09–உதவித் தொகை – 01–நடப்புச் செலவுக்கான உதவித் தொகை. (த.தொ.கு.2235–02–101–MG–0914)."**

5.மேற்படி செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதியொதுக்கம் 2017–18ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைப் பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.14865/நிதி(சந)/2018, நாள் 26.03.2018–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

<u>நகல்</u>:
அரசு செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (சமூக நலம்)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 27/3/18